# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நகர சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1984 திசெம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984 திசெம்பர் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நகரசபைகள் (திருத்தச்) சட்டம்

[1984, திசெம்பர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 51/82
1648

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நகரசபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 36 ஆம் பிரிவானது, அதன் (அ) என்னும் பந்தியினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— 255 ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) அவசியமான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், அத்துடன் காலத்துக்குக்காலம் அத்தகைய எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரை நீக்குவதற்கும், சபையானது பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய சம்பளத்தை, படிகளை அல்லது ஊதியத்தை ஏதேனும் பதவிக்கு அல்லது சேவைக்குக் குறித்தொதுக்குவதற்கும் :

ஆயின், 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற அல்லது உறுப்பினரொருவராக இருப்பதாகக் கருதப்படுகின்ற அத்தகைய சபையின் எவரேனும் அலுவலருக்கும் அல்லது சேவையாளருக்கும் அவர் தொடர்பிலும் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது, "ஆயிரம் ரூபாவினை விஞ்சுகின்ற செலவினமொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "பத்தாயிரம் ரூபாவினை விஞ்சுகின்ற செலவினமொன்றை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவினை விஞ்சுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவினை விஞ்சுகின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது, "ஆயிரம் ரூபாவினை விஞ்சுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவினை விஞ்சுகின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

ஃ 080180—2,850 (11/84)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாததொரு குற்றப்பணத்தினுலும் இருபது ரூபாவினை விஞ்சாதவொரு மேலதிக குற்றப்பணத்தினுலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுலும் இருநூறு ரூபாவினை விஞ்சாதவொரு மேலதிக குற்றப்பணத்தினுலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "பத்து ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்து ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஈ) அதன் (4) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பிடிக்கப்பட்ட விலங்கு எதுவும், எந்த ஆளினால் அந்த விலங்கு பிடிக்கப்படக் கூடுமோ அந்த ஆளின் பயன்பாட்டுக்கெனவும், அந்த விலங்கானது தொழுவத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒவ்வொரு நாளுக்காகவும் சபையானது உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நிர்மானத்தின்மூலம் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய தொகையினைக் கொடுப்பனவு செய்திருப்பதன் மீதன்றி, அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படுதலாகாது." ; அத்துடன்

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவில், "அத்துடன் எந்த ஆளினால் விலங்கானது பிடிக்கப்பட்டதோ" என்பது தொடங்கி "செலுத்தியதன் பின்னர்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"அத்துடன் எந்த ஆளினால் அந்த விலங்கானது பிடிக்கப்பட்டதோ அந்த ஆளுக்கும் அந்த விலங்கானது தொழுவத்தில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு நாளுக்குமான கட்டுக்காவலுக்கும் பராமரிப்புக்குமென சபையானது உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நிர்மானத்தின்மூலம் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைச் செலுத்தியதன் பின்னர்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்து ரூபாக் குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பது ரூபாக் குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவானது, "பத்து ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினால்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 127அ, 127ஆ, 127இ, 127ஈ அத்துடன் 127உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

23. பின்வரும் புதிய பிரிவுகள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச் சட்டவாக்கத்தின் 127அ, 127ஆ, 127இ, 127ஈ, 127உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" பிள்ளையினாலான தொல்லை.

127அ. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட ஏதேனும் பிள்ளையின் கவனிப்பை அல்லது கட்டுக்காவலைக் கொண்டிருக்கும் ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய பிள்ளையானது ஏதேனும் வீதியில் அல்லது வீதியின் ஓரத்தில் தொல்லை புரிவதனைத் தடுக்காது தவிர்க்குமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

பகிரங்க நீராடும் இடங்கள்.

127ஆ. (1) சபையானது, பகிரங்க அறிவித்தல்மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நேரங்களில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் தவிர்ந்த ஆட்களாலும் அல்லது அந்நோக்கத்துக்கென குறித்தொதுக்கப்படாத ஏதேனும் பகிரங்க இடத்தில் நீராடுவதனையோ விலங்குகளைக் கழுவுதலையோ அல்லது உடைகளைத் தோய்ப்பதையோ அத்துடன் பகிரங்க இடத்திலுள்ள நீரை எவ்வகையிலேனும் தீழ்ப்பாக்குகின்ற அல்லது அந்நீரை அசுத்தமாக்குகின்ற அல்லது பயன்பாட்டுக்கு உகந்ததல்லாதது ஆக்குகின்ற அல்லது நீராடும் அல்லது கழுவும் இடங்களைப் பயன்படுத்தும் ஆட்களுக்கு வசதியீனத்தை அல்லது தொந்தரவை உண்டாக்கக்கூடிய மற்றெல்லாச் செயல்களையும் தடைசெய்யலாம். அத்தகைய அறிவித்தலானது சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில், கசெற்றிலும் அத்துடன் ஆகக் குறைந்தது ஒரு சிங்கள, ஒரு தமிழ் அத்துடன் ஓர் ஆங்கில செய்தித்தாளிலும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவுக்கு முரணாக நீராடுகின்ற, கழுவுகின்ற அல்லது ஏதேனும் செயலைச் செய்கின்ற ஒவ்வோராளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்திர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

நீர்த்தேக்கங்களுள் அல்லது நீர் வேலைகளினுள் பாயும் அருவியைத் தீழ்ப்பாக்குதல்.

127இ. ஏதேனும் நகரசபைக்குச் சொந்தமான நீர் வேலைகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் நீர்த்தேக்கத்தில் நீராடுகின்ற அல்லது எவையேனும் ஆடைகளை அல்லது வேறு பொருட்களைக் கழுவுகின்ற அல்லது ஏதேனும் குப்பையை, கழிவுப் பொருளை அல்லது அசுத்தப்பொருளை நீர்த்தேக்கத்தினுள் பாயச் செய்கின்ற அல்லது பாய அனுமதிக்கின்ற அல்லது வேறு வகையாக எம்முறையிலேனும்

நீர்த்தேக்கத்தினை தீழ்ப்பாக்குகின்ற அல்லது அசுத்த மாக்குகின்ற அல்லது ஏதேனும் அத்தகைய நீர்த்தேக் கத்திற்குள் நீர் சென்றடையும் ஏதேனும் நீரோடையை அல்லது வாய்க்காலை மேற்சொன்னவாறு அசுத்த மாக்குகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் அத்துடன் அவ்வாறு குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்பின்னர் அல்லது அந்தத் தவறு பற்றிக் கவனத்தை ஈர்க்கும் நகரசபையின் எழுத் திலான அறிவித்தலைப் பெற்றுக்கொண்டதன்பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக் கும் நூறு ரூபாவுக்கு மேற்படாத மேலதிக குற்றப் பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்.

தொழிற்சாலைகளினால் விளைவிக்கப்படும் தீழ்ப்பு.

**127ஈ.** (1) ஏதேனும் நகரசபையின் நிருவாக எல்லை களினுள், சுற்றாடலின் சுகாதாரத்துக்கு ஆபத்தினை அல்லது பங்கத்தினை விளைவிக்கும் வகையில் தீழ்ப்பினை ஏற்படுத்தும் ஏதேனும் தொழிற்சாலையினை நடாத்து கின்ற அல்லது நடாத்துவதற்குக் காரணமாகின்ற எவ ரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) நீதிவானொருவர் சுருக்கமுறையான விளக்கத் தின்பின்னர் (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக் காக ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, அவர் அத்தகைய தொழிற்சாலையின் காரணமாக ஏற் பட்ட தீழ்ப்பினது அளவினைப் பொறுத்து—

(அ) ஒரு நீதிவானெனவர் தனது சாதாரண நியாயா திக்கத்தினைப் பிரயோகிக்கையில் விதிக்கக் கூடிய குற்றப்பணத்தொகையினை அத்தகைய தொகை விஞ்சுகின்றதென்பது எவ்வாறிருப் பினும், எந்த வளவுகளில் அந்தத் தொழிற் சாலையானது அமைந்துள்ளதோ அந்த வளவு கள் தொடர்பில், இக்கட்டளைசட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதே னும் துணைவிதியின் ஏற்பாடுகளின்கீழ் வழங் கப்பட்ட உரிமமொன்றுக்குச் செலுத்தப்படற் பாலதான கட்டணத்தின் இருமடங்கிற் குச் சமமான குற்றப்பணமொன்றைச் செலுத்தும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளை யிடுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு அற விடப்பட்ட தொகை சபையின் நிதியத்துள் செலுத்தப்படவேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் மரங்கள், கிளைகள், துண்டம் அல்லது பழங்கள் தொடர்பாக நகரசபைத் தவிசாளருக்குள்ள தத்துவம்.

127உ. (1) ஏதேனும் நகர இடப்பரப்புக்குள்ளாக இருக்கின்ற ஏதேனும் மரம் அல்லது ஏதேனும் கிளை, துண்டம், பழம் அல்லது மரத்தின் வேறேதேனும் பாகம் ஏதேனும் கட்டிடத்திற்கு சேதம் விளைவிக்கின்றவிடத்து அல்லது சேதம் விளைவிக்கக்கூடியவிடத்து அல்லது ஏதேனும் கட்டிடத்தில் இருப்பவர்களுக்கு அல்லது பகிரங்கப் பாதை வழியே செல்பவர்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றவிடத்து அத்தகைய இடப்பரப்புக்கான சபையின் தவிசாளர் அத்தகைய மரம் நிற்கின்ற காணிச் சொந்தக்காரரிடம் அல்லது இருப்பாட்சியாளரிடம் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல்மூலம் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய மரத்தை அல்லது கிளையை அல்லது துண்டத்தை அல்லது அத்தகைய மரத்தின் முகப்பை அல்லது வேறு பாகத்தை ஒன்று சேர்த்துக் கட்டிப் பாதுகாக்குமாறு அல்லது வெட்டி விழ்த்தி அகற்றுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலைப் பெற்றுக் கொண்டவரான ஒவ்வோராளும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக அத்தகைய ஆள் மறுக்கும் அல்லது அசட்டை செய்யும் பட்சத்தில், அத்தகைய தவிசாளர், அல்லது அத்தகைய தவிசாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது வேலையாள், அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட காணிக்குள் நுழைந்து அத்தகைய அறிவித்தலினால் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட விடயத்தைச் செய்யலாம் என்பதுடன் அதன்மூலம் உறப்படும் செலவுகள் சபைக்குப் போகுமதியான கடன் ஒன்று என்றாற் போல அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படலாம்.

பிரிவுகள் 127ஆ, 127இ, 127ஈ ஆகியவற்றின் நோக்கங்களுக்காக, “தீழ்ப்பு” என்பது, ஏதேனும் பயனுள்ள பயன்பாட்டை பாதகமாகப் பாதிக்கத்தக்க விதமாக அல்லது பொது உடனலத்திற்கு, பாதுகாப்பிற்கு, விலங்குகளுக்கு, பறவைகளுக்கு, வனவிலங்குகளுக்கு, மீன்களுக்கு, நீர்வாழ்வனவற்றிற்கு அல்லது தாவரங்களுக்கு தீங்கு பயப்பதான அல்லது தீமையை விளைவிக்கக்கூடியதான ஒரு நிலையை உருவாக்கத்தக்கவிதமாக கழிவுப்பொருட்களை வெளியேற்றவிடுவதன்மூலம், அகற்றுவதன்மூலம், இட்டுவைப்பதன் மூலம், சூழலின் எப்பாகத்தினதும் பௌதீக, வெப்ப

தட்ப, இரசாயன, உயிரியல் அல்லது கிளர் மின்வீசு தன்மைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக மாற்றுதல் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 ஆம் பிரிவானது, "நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுலும் அத்துடன் ஐம்பது ரூபா மேலதிகக் குற்றப்பணத்தினுலும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவினை விஞ்சாத ஒரு குற்றப்பணத்தினுலும் ஐந்நூறு ரூபா மேலதிகக் குற்றப்பணத்தினுலும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அதன் (ஊ) என்னும் பந்தியில் "மொத்தத்தில் இரண்டாயிரம் ரூபாவினை விஞ்சாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "மொத்தத்தில் ஐயாயிரம் ரூபாவினை விஞ்சாத" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) அதன் (எ) என்னும் பந்தியில் "மொத்தத்தில் ஆயிரம் ரூபாவினை விஞ்சாத" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "மொத்தத்தில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(iii) அதற்கான (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலம்:—

"(ஐ) சபையினுல், நகரசபைகளின் சங்கத்திற்கு எந்த ஆண்டிலேனும் செலுத்தப்படற்பாலதானதென அமைச்சரினுல் அங்கீகரிக்கப்படக்கூடியவாருன மொத்தத்தில் ஆயிரம் ரூபாவினை விஞ்சாத எல்லாத் தொகைகளும் அல்லது அத்தகைய பிற தொகைகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவானது, அதன் (3) ஆம் உட்பிரிவில், "நூறு ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்தினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது,.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவானது, அதற்கான (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவானது, அதற்கான (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 181 ஆம் பிரிவானது, அதன் (3) ஆம் உட்பிரிவினுல், "நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றி னுலும் அத்துடன் ஐம்பது ரூபாவினை விஞ்சாத மேலதிக குற்றப்பண மொன்றினுலும்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுலும் அத்துடன் ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத மேலதிக குற்றப்பணமொன்றினுலும்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 181 ஆம் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 219 ஆம் பிரிவானது, "புரியப் பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "புரியப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 219 ஆம் பிரிவைத் திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது மூன்று மாதங் களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையினதான மறியற்றண்டனைக்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையினதான மறியற்றண்டனைக்கு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 226 ஆம் பிரிவானது, "ஐம்பது ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 226 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 227 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவினை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றினுல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "ஐயாயிரம் ரூபாவினை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றினுல்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 227 ஆம் பிரிவைத் திருத்துதல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 229 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 229 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.